OS.No. 117/2023
Date : 09.06.2025
Witness Name & Rank – தாயம்மாள் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை, பிரமாண வாக்குமூலம் அனைத்தும சரியானவை என்றால் சரிதான். எனது தந்தை பெயர் நாச்சிமுத்து கவுண்டர் அவரது தந்தை பெயர் மசாக்கவுண்டர் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 3 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள் என்றால் சரிதான். மேற்படி பெண் குழந்தைகள் நான் மற்றும்1, 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி ஆண் குழந்தைகள் பெயர் ராமசாமிகவுண்டர் மற்றும் சின்னசாமிகவுண்டர் என்றால் சரிதான். அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். மேற்படி வழகக்கு சொத்து எனது தந்தையின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனதுஅப்பாவும் எனது சகோதரர்களான ராமசாமி மற்றும் சின்னசாமி 07.04.1983ஂம் தேதி பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து அந்த பாகப்பத்திரத்தின் படி ஏ அட்டவணை சொத்தாக எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி பாகத்தில் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட நிலையில் அது முதல் மேற்படி சொத்து எனது அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றால் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் உண்டான சொத்து.
2. மேற்படி எனது அம்மாவிற்கும் சேர்த்து ஒதுக்கியதாக பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி சொத்து எனது அப்பாவிற்கு பாகம் ஒதுக்கிய பிறகு சில காலம் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றால் எனது அம்மாவும் அப்பாவும் அனுபவித்து வந்தார்கள். அதன் பிறகு எனது அப்பா 06.10.1988 தேதி எனது அப்பாவின் பாக சொத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக இரண்டு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. ஏதோ அடமானம் என்று சொல்லி மிரட்டி எழுதி வாங்கிக்கொண்டார்கள். எழுதி வாங்கிய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் படித்து காண்பித்தாரா என்றால் இல்லை. மேற்படி பத்திரத்தை படித்து பார்க்காமல் அது பற்றி தெரியாமல் மேற்படி ஆவணங்கள் பெயரளவு மற்றும் போலி ஆவணங்கள் என சொல்லியுள்ளது வழக்கிற்கான பொய் சங்கதி என்றால் சரியல்ல. 06.10.1988 தினம் முதல் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அந்த சொத்துக்களின் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல.
3. மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் இன்றைய தினம் வரை உரிமையாளர்கள் என அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது

தந்தை 16.12.1989 இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் 21.08.2009 ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனதுஅப்பா மற்றும் அம்மா இந்த சொத்து உனக்கு தான் என சொன்னார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் மேற்குரிய சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்னதுபோல் எனது தந்தை எதுவும் சொல்லவில்லை வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு எங்கு திருமணம் நடந்தது என்றால் காடாம்பாடி கிராமத்தில் திருமணம் நடந்தது. எனது கணவருக்கு அங்கு வீடு, தோட்டம் உள்ளது என்றால் சொன்னார்கள் ஆனால் நான் திருமணம் முடித்தது முதல் அங்கு செல்லாமல் எனது தாய் வீட்டிலேயே இருந்தேன். எனது கணவரின் தோட்டம் வீடு 30-40 ஆண்டுகளுக்கு முன்பே விற்க பட்டுவிட்டது என்றால் இல்லை, அவரது சகோதர, சகோதரிகளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார். நான் திருமணம் முடித்து தாய் வீட்டிலேயே உள்ளதை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனது கணவர் அவரது சகோதர, சகோதரிகளுக்கு எழுதி வைத்தாக சொல்லியுள்ளது பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. எனது கணவருடைய சொத்துக்கள் அனைத்தும் அவருடைய கடனால் விற்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி எனது கணவரின் வீடு சொத்துக்கள் விற்கப்பட்டதால் வீடு இல்லாமல் 1 மற்றும் 2ம் பிரதிவாதியிடம் வந்து அனுமதியின் பேரில் தாவா சொத்தில் தங்கிகொள்ள அனுமதிக் கோரி சகோதரி என்ற அடிப்படையில் 2001 முதல் தாவா சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுமதியுடன் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுதாபத்தால் வழக்கு சொத்தில் தங்கி கொள்ள அனுமதித்தார்கள் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் உரிமையாளர் என்ற அடிப்படையில் அனுபவித்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் எப்போது முதல் வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் பிறந்தது முதல் தாவா சொத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன். நான் வழக்குரையில் 1984 மற்றும் 1986, 1988 முதல் குடியிருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 2001க்கு முன்பு நான் தாவா சொத்தில் குடியிருந்தை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா மறைவு வரை எனக்கும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவும், சகோதரர்களும் பாகம் பிரித்த பிறகு பேச்சு வார்த்தை இல்லை. எனது அம்மா மறைவிற்கு பிறகு 1 மற்றும்2 பிரதிவாதிகள் தாவா சொத்தை காலி செய்ய சொல்லி கேட்டார்களா

என்றால் எனது அம்மா இருந்த போதே கேட்டார்கள். சுமாராக எப்போது காலி செய்ய சொல்லி கேட்கிறார்கள் என்றால் 25 ஆண்டுகளாக கேட்கிறார்கள்.

6. 06.10.1988 செட்டில்மெண்ட எழுதப்பட்ட போதே என்னை காலி செய்ய சொல்லி கேட்பதாக வழக்குரையில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். மேற்படி 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த தான பத்திரம் செல்லாது என்றால் அவரது மறைவிற்கு பிறகு மேற்படி சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்கு போக வேண்டும் எனவே எனது வழக்குரையில் அடிப்படையிலேயே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தனது தாயார்மறைவிற்கு பிறகு வீட்டில் தங்கி கொள்ள எனக்கு அளித்த அனுமதியை ரத்து செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எனவே நான் காலி செய்ய மறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சண்டை போட்டதால் இந்த சொத்து எனக்கு உரிமையுள்ளது என தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது பெயருக்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனவே இந்த வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி 22.06.2011ம் தேதி பிரதிவாதிகள் சொத்தை அளக்க வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது பொய் சாட்சி என்றால் சரியல்ல.

7. மேற்படி அளக்க கூடாது என வட்டாட்சியரிடம் பதில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்தேன். ஆனால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அதே போல 28.06.2011ம் தேதி பிரதிவாதிகள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது குறித்து போலிஸாரிடம் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுத்தேன். ஆனால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு மேற்கில் 2ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதி வீட்டிற்கும் மேற்கில் காலியிடம் இருந்தது என்றால் இல்லை. நான் மேற்படி காலியிடத்தில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வீடு கட்டிடம் கட்டியபோது 2ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதில் போலிஸார் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது கட்டிடம் கட்டினேன் என்றால் சரிதான். அது தொடர்பாக கட்டிடம் கட்ட கூடாது என பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்தபோது கட்டிடம்கட்டப்பட்டதால் அந்த கட்டிடத்தின் மீது உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிரதிவாதிகள் கோரப்பட்ட வழக்கு சொத்தை சுவாதீனம் கோரி பரிகாரம் கிடைக்கூடியது என்றால் சரியல்ல.

8. யாருக்கு எதிராக எதிரிடை பரிகாரம் கோரியுள்ள என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்டுள்ளேன். நான் எனது வழக்குரையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு வழக்கில் உரிமை மூலம் இல்லை என சொல்லியுள்ள

நிலையில் அவர்களுக்கு எதிராக எதிரிடை பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 06.10.1988 செட்டி்ல்மெண்ட் ஆவணங்கள் 2ஐ பொறுத்து எனது தந்தையோ நானோ ஏதேனும் சட்ட நடிவக்கை எடுத்தோமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் கணவர் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது வேறு வழக்கு சொத்து என்றால் இ்ல்லை. இதே சொத்து தான் மேற்படி சங்கதிகளை இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி தாவா சொத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு 06.10.1988 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் நான் கோரியுள் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல அதே போல் நான் வெறும் அனுமதியின்பேரில் அனுபவத்தில் இருந்துள்ளதால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கோரியுள்ள சுவாதீன பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. அவர்கள் கோரியுள்ள படி காலி செய்து கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் **6** முதல் **8** குறுக்கு விசாரணை **2**ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1. இந்த வழக்கில்தாக்கல் செய்துள்ள அனுபவத்தை காட்டும் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் நாச்சிமுத்து கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரிதான் எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வேண்டும் என்றே பிரச்சனை செய்ய வேண்டும் என மிகுந்த பொருட்செலவில் வழக்கு நிலுவையில் இருந்த போது வீடு கட்டியுள்ளேன். எனவே கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. எனவே 2 , 6 முதல் 8 பிரதிவாதிகளிடம் எந்த காலத்திலும் பணம் கோர முடியாது என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகள் 2, 6 முதல் 8 எனக்கு அளித்த அனுபவ உரிமையை ரத்து செய்துள்ளதால் பிரதிவாதிகளின் கோரியுள்ள பரிகாரம் கால வரை சட்டத்தின் படி பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு 2 , 6 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள தனித்தனி வழக்குகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.